செ.வெ.எண்:23 நாள்:15.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் வட்டத்தில் 68 வருவாய் கிராமங்களிலும், உடையார்பாளையம் வட்டத்தில் 99 வருவாய் கிராமங்களிலும், செந்துறை வட்டத்தில் 28 வருவாய் கிராமங்களிலும் வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் கொண்டு சீமைக்கருவேலி மரங்கள் அகற்ற வேண்டி விழிப்புணர்வு தொடர்பான துண்டு பிரசுரங்களை (அவசர நோடீஸ்) வீடுவீடாக சென்று வழங்கி வருகின்றனர்.

மேலும் பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் காலி மனைகளில் சீமைக்கருவவேலி மரங்களால் சுற்றுசூழல் பாதிப்பிற்குள்ளாவதால், நிலத்தின் உரிமையாளர்களே முழுமையாக அகற்றி வருவதை வட்டாட்சியர்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

மேலும், தவறும் பட்சத்தில் பட்டா நிலத்தில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை சட்டப்படி அகற்றிவிட்டு, அதற்கான செலவுத்தொகையை வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் கீழ் அபராதத்துடன் வசூல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.